பக்கங்கள்: 07

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 03 வள்ளுவர் ஆண்டு 2053 ஆவணி 13 திங்கட்கிழமை 29.08.2022 கதிர் 185

## மட்டக்களப்பில் தூக்கில் தொங்கிய நிலையில் இளைஞரின் சடலம் மீட்பு

மட்டக்களப்பு பொலிஸ் பிரிவிலுள்ள தனியார் விடுதி ஒன்றில் தூக்கில் தொங்கிய நிலையில் இளைஞர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

டிக்கோயா, லோவர் டிவிசனைச் சேர்ந்த 21 வயதுடைய இளைஞரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார். 2

# எஞ்சியுள்ள ஒரே தெரிவு ஐக்கிய மக்கள் சக்தியே!



### கட்சியின் தலைவர் சஜித் தெரிவிப்பு

எதிர்காலத்தில் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியும் ஐக்கிய தேசியக் கட்சியும் இணைந்து போட்டியிடும் நிலைமையே காணப்படுகின்றது என்று தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, நாட்டில் எஞ்சியுள்ள ஒரே தெரிவு ஐக்கிய மக்கள் சக்தியே என்றும் குறிப்பிட்டார். 2

## யாழில் ஹெரோயின் வியாபாரி சிக்கினார்

யாழ்ப்பாணத்தில் ஹெரோயின் போதைப்பொருளை விற்பனை செய்து வந்தார் எனத் தேடப்பட்டு வந்த 27 வயதுடைய சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கொக்குவில் கிழக்கு பகுதியில் ஹெரோயினை விற்பனை செய்ய முயன்ற வேளை யாழ். மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவினரால் நேற்றுக் கைதுசெய்யப்பட்டுள்ளார். அவரிடமிருந்து 5 கிராம் 400 மில்லி கிராம் ஹெரோயி னும், ஒரு இலட்சம் ரூபா பண மும் மீட்கப்பட்டது என்று பொலிஸார் மேலும் கூறினர்.

## அக்கரைப்பற்றில் ஹெரோயினுடன் இருவர் மாட்டினர்

அக்கரைப்பற்றில் இரு வேறு இடங்களில் ஹெரோயினுடன் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அக்கரைப்பற்று -வெள்ளப் பாதுகாப்பு வீதியில் ஹெரோயினுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்

அக்கரைப்பற்று பொலிஸாருக்குக் கிடைக்கப்பட்ட இரகசியத் தகவலின்படி குறித்த பிரதேசத்துக்குச் சென்ற பொலிஸார் நபர் ஒருவரைக் கைதுசெய்துள்ளதுடன் அவரிடமிருந்து 35 மில்லிகிராம் ஹெரோயினும் 2

## பந்துல, பிரசன்ன, விமல் விசாரணைக்கு அழைப்பு



அமைச்சர்களான பந்துல குணவர்தன, பிரசன்ன ரணதுங்க மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச ஆகியோர் இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவுக்கு அழைக்கப்பட்டுள்ளனர். 2

## ஜெனிவாவில் சிங்களவர்கள் அரசுக்கு எதிராகப் போராட்டம்




இலங்கை அரசின் அடக்கு முறைகளுக்கு எதிராகவும், பயங்கரவாதத்தடைச்சட்டத்தை நீக்குமாறு வலியுறுத்தியும், அவசரகாலச் சட்டத்தை வாபஸ் பெறக் கோரியும் ஜெனிவாவிலுள்ள ஐ.நா. மனித உரிமைகள் சபை வளாகத்தில் 2

### மின் கட்டண அதிகரிப்புக்கு எதிர்ப்பு

## நாடாளுமன்ற வளாகத்தில் சஜித் கூட்டணி போராட்டம்





மின்சாரக் கட்டணம் அதிகரிக்கப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி இன்று போராட்டத்தில் ஈடுபட்டது.

எதிர்க்கட்சித் தலை வர் சஜித் பிரேமதாஸ 2

## எந்தப் பிரேரணை வந்தாலும் எங்களுக்குச் சவால் இல்லை

### பிரதமர் தினேஷ் சொல்கின்றார்



ஜெனிவா அமர்வில் இலங்கைக்கு எதிராக எத்தகைய பிரேரணைகள் வந்தாலும் அது சவாலாக அமையாது என்று பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

ஜெனிவா அமர்வு இம்முறை இலங்கைக்குச் 2

## கஞ்சாவுடன் சிக்கியது ஹயஸ்; இரண்டு இளைஞர்களும் கைது

(ஆர்.கலையமுதன்)



ஹயஸ் வாகனம் ஒன்றில் 50 இலட்சம் ரூபா பெறுமதியான கஞ்சா, யாழ். தொண்டமனாறு - வளலாய்ப் பகுதியில் வைத்து கைப்பற்றப்பட்டுள்ளது. 2

## சகோதரனையும் சகோதரியையும் சாகடித்த யானை

கண்டி மாவட்டம், ஹசலக்க, கங்கேயாய, பஹே - எல பகுதியில் காட்டு யானை தாக்கியதில் 16 வயதுடைய பாடசாலை மாணவி ஒருவர் உயிரிழந்துள்ளார். இவர், 14 நாள்களுக்கு முன் னர் யானை தாக்கி உயிரிழந்த தனது 2

## நெருக்கடி நேரத்தில் பிரேரணை எதற்கு?

### இப்படிக் கேட்கின்றார் விமல்



இலங்கை பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள வேண்டுமானால் சர்வதேச நாடுகள் உதவிகளைச் செய்ய வேண்டும். இவ்வாறான நெருக்கடி நேரத்தில் இலங்கைக்கு எதிராக ஏன் மற்றுமொரு பிரேரணையை முன்வைக்க வேண்டும்?

-இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார் சுயாதீன அணியின் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச.

அவர் மேலும் தெரிவிக்கையில், 2

## பதவி ஆசை பிடித்த சஜித்துக்கு நாடு பற்றி கவலையே இல்லை



### அமைச்சர் அமரவீர பதிலடி

எதிர்க்கட்சித் தலைவர் பதவியைத் தக்கவைத்துக் கொள்வதற்காகவே சர்வகட்சி அரசில் இணைவதற்குச் சஜித் பிரேமதாஸ எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றார்.

- இவ்வாறு அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார். 2

## எந்தப் பிரேரணை ...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சவாலாக அமையாது என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருந்த நிலையில், பிரதமரும் அதையொத்த கருத்தை வெளியிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜெனிவாவில் அடுத்த மாதம் நடைபெறவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடரில் இலங்கையின் நிலைப்பாட்டை அரசு சமர்ப்பிக்கும்.

இந்த மாநாடு இலங்கைக்குச் சவாலாக அமையாது என்றே நாம் கருதுகின்றோம்.

இலங்கை தொடர்பில் என்ன பிரேரணை வந்தாலும் அதனை அரசு எதிர்கொள்ளத் தயாராகவுள்ளது - என்றார்.

## ஜெனிவாவில்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புலம்பெயர் சிங்களவர்கள் கவனயீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

கடந்த காலங்களில் ஜெனிவாவில் இலங்கை அரசுக்கு எதிராகத் தமிழ் மக்களே போராட்டம் நடத்துவது வழமை. அந்தக் காலப் பகுதிகளில் சிங்கள மக்கள், இலங்கை அரசுக்கு ஆதரவு தெரிவித்தும், அதன் மனித உரிமை மீறல்களை ஆதரித்தும் போராட்டம் நடத்தி வந்தனர்.

முதல் தடவையாக இலங்கை அரசுக்கு எதிராக ஐரோப்பாவிலுள்ள புலம்பெயர் சிங்கள மக்கள் ஜெனிவாவில் போராட்டம் நடத்தியுள்ளனர்.

'அடக்குமுறையை நிறுத்து' என்ற தொனிப்பொருளில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இலங்கை அரசுக்கு எதிரான காலி முகத்திடல் போராட்டச் செயற்பாட்டாளர்கள் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்படு வதைக் கண்டித்தும், கைதுசெய்யப்பட்ட போராட்டக்காரர்கள் விடுவிக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தியும், பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்க வேண்டும் என்று கோரியும் இந்தப் போராட்டத்தில் அவர்கள் கோம் எழுப்பினர்.

ஊழல்வாதிகள் தற்போதும் அமைச்சரவையில் உள்வாங்கப்பட்டுள்ளனர் என்றும், ஊழல்வாதிகள் ஆளும் கட்சியில் இன்னமும் உள்ளார்கள் என்றும், அவர்கள் தண்டிக்கப்படாமையைக் கண்டித்தும் அவர்கள் கோம் எழுப்பினர்.

இந்தப் போராட்டத்தில் ஐரோப்பிய நாடுகளில் வாழ்கின்ற புலம்பெயர் சிங்கள மக்கள் கலந்துகொண்டனர். குறிப்பாக இத்தாலியிலிருந்தே அதிகளவானோர் பங்கேற்றனர். அவர்கள், இலங்கையில் இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலுக்கும் நீதி வேண்டிக் கோம் எழுப்பினர்.

## பதவி ஆசை ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சர்வகட்சி அரசில் இணைந்து, அமைச்சுப் பதவிகளை ஏற்கப்போவதில்லை என்று சஜித் பிரேமதாஸ விடுத்துள்ள அறிவிப்புக்கு ஊடகங்களிடம் பதில் வழங்கும் வகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சர்வகட்சி அரசு அமைக்குமாறு பல தரப்பினரும் கோரிக்கை விடுக்கின்றனர். இது தொடர்பில் எதிர்க்கட்சிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

எனினும், எதிர்க்கட்சித் தலைவர், இந்த விவகாரத்திலும் அரசியலே நடத்துகின்றார். தனது எதிர்க்கட்சித் தலைவர் பதவியை தக்க வைக்கவே, சர்வகட்சி அரசை எதிர்க்கின்றார்.

பதவி ஆசை பிடித்த சஜித்துக்கு நாடு பற்றி எந்தக் கவலை இல்லை - என்றார்.

## மின் கட்டண ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைமையில் நாடாளுமன்ற வளாகத்தில் நடைபெற்ற இந்த எதிர்ப்பு நடவடிக்கையில் ஐக்கிய மக்கள் சக்தி தலைமையிலான கூட்டணியில் அங்கம் வகிக்கும் பங்காளிக் கட்சிகளின் உறுப்பினர்களும் பங்கேற்றனர்.

மின் கட்டண அதிகரிப்பை உடன் மீளப்பெறுமாறு இதன்போது அவர்கள் வலியுறுத்தினர்.

## நெருக்கடி நேரத்தில்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரேரணைகள் மூலம் இலங்கையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியாது என்பதைச் சர்வதேச நாடுகள் கவனத்தில் கொள்ள வேண்டும். பிரேரணைகள் இன உறவுக்கு மேலும் குந்தகத்தையே ஏற்படுத்தும்.

பொருளாதார நெருக்கடியிலிருந்து மீண்டெழ வேண்டுமெனில் சர்வதேச நாடுகளின் உதவிகளே வேண்டும். இந்நிலையில், இலங்கைக்குப் எதிராகப் புதிய பிரேரணை எதற்கு?

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பில் நிறைவேற்றப்பட்ட எந்தப் பிரேரணையும் செயலுருப்பெற்றதாக வரலாறு இல்லை - என்றார்.

## அக்கரைப்பற்றில் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கைப்பற்றப்பட்டுள்ளது. இதேவேளை, அக்கரைப்பற்றில் மற்றுமோர் இடத்தில் 45 மில்லிகிராம் ஹெரோயின் வைத்திருந்த நபர் ஒருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இரண்டு சந்தேகநபர்களும் அக்கரைப்பற்று நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டபோது எதிர்வரும் செப்டெம்பர் 9ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

## மட்டக்களப்பில் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடுதி ஒன்றில் வாடகைக்கு அறை எடுத்து அங்கு தங்கியிருந்த இந்த இளைஞர், மட்டக்களப்பிலுள்ள தனியார் வங்கி ஒன்றில் தொழில் புரிந்து வந்தார் என்று பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

மட்டக்களப்பு மாவட்ட நீதிமன்ற நீதிவானின் உத்தரவுக்கமைவாகச் சம்பவ இடத்துக்குச் சென்ற மண்டூர் பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி தம்பிப்பிள்ளை தவக்குமார் சடலத்தைப் பார்வையிட்டார். பிரேத பிரிசோதனையின் பின்னர் சடலத்தை நெருங்கிய உறவினர்களிடம் ஒப்படைக்கும்படி பொலிஸாருக்கு அறிவித்துள்ளார்.

## சகோதரனையும் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சகோதரனின் ஆத்ம சாந்தி வழிபாட்டுக்காக பெற்றோருடன் விகாரைக்குச் சென்று கொண்டிருந்தபோதே யானையின் தாக்குதலுக்கு இலக்காகி காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு உயிரிழந்துள்ளார்.

பஹே - எல என்பது காட்டு யானைகளின் தாக்குதல்களை அடிக்கடி எதிர்கொள்ளும் ஒரு கிராமமாகும். விலங்குகள் பயிர்களைச் சேதப்படுத்துவதோடு கிராம மக்களின் உயிருக்கு அச்சுறுத்தலாக இருக்கின்றன எனவும் கூறப்படுகின்றது.

உயிரிழந்த மாணவி இன்று ஆரம்பமாகும் ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சையின் செயன்முறை பரீட்சைக்குத் தயாராகி வந்துள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

## பந்துல, ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த மே மாதம் 9ஆம் திகதி மற்றும் அதன் பின்னர் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களின்போது நாடாளுமன்ற உறுப்பினர்களின் வீடுகள் எரிப்பு மற்றும் சொத்துக்களுக்குச் சேதம் விளைவித்தமை தொடர்பான விசாரணைகள் தொடர்பிலேயே இந்த அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது என ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அதன்படி விசாரணைக்குத் தேவையான வாக்குமூலம் பதிவு செய்யப்படவுள்ளது.

மேற்படி நாடாளுமன்ற உறுப்பினர்களின் வீடுகளுக்குத் தீ வைக்கப்பட்டது என்று இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. அது தொடர்பான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதேவேளை, கடந்த மே மாதம் 9ஆம் திகதி மற்றும் அதற்குப் பின்னரான காலப்பகுதியில் நடைபெற்ற வன்முறைச் சம்பவங்களின்போது வீடுகள் மற்றும் சொத்துக்களுக்கு ஏற்பட்ட சேதங்கள் தொடர்பான விசாரணைக்காக உள்ளூராட்சி சபைகளின் தலைவர்கள் பலரும் மனித உரிமைகள் ஆணைக் குழுவுக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

## கஞ்சாவுடன் சிக்கியது ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அத்துடன் இரண்டு இளைஞர்களும் சந்தேகத்தில் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் 31 மற்றும் 32 வயதுடைய மன்னார் மற்றும் வளலாய் பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என்று அச்சுவேலிப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நீண்டகாலமாக இந்தியாவிலிருந்து வளலாய் கடற்பரப்பு ஊடாக கஞ்சா கடத்தப்படுவது தொடர்பில் அச்சுவேலிப் பொலிஸாருக்குத் தகவல் கிடைக்கப்பெற்று வந்திருந்தது. இதனடிப்படையில் பொலிஸ் பொறுப்பதிகாரி பிரபாத் தலைமையிலான குழுவினர் கடற்படையினருடன் இணைந்து இந்தக் கஞ்சா கடத்தலை முறியடித்தனர்.

இதன்போது ஹயஸ் வாகனத்தில் இருந்த 51 கிலோ 500 கிலோகிராம் கஞ்சா மீட்கப்பட்டது.

கைப்பற்றப்பட்ட ஹயஸ் வாகனமும், கஞ்சாவும் மல்லாகம் நீதிவான் நீதிமன்றத்தில் பாரப்படுத்தப்படவுள்ளதுடன் சந்தேகநபர்களையும் ஆஜர்படுத்த அச்சுவேலிப் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

## எஞ்சியுள்ள......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஐக்கியமக்கள்சக்தியின்வடகொழும்பு தொகுதி அமைப்பாளர் திரு.சி.வை.ஜி. ராம் ஏற்பாடு செய்திருந்த செயற்குழு உறுப்பினர்கள் சந்திப்பு நேற்றுப் பிற்பகல் நடைபெற்றது. ஏராளமானோர் இதில் கலந்துகொண்டதுடன் ஐக்கிய மக்கள் சக்தியைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற மக்கள் பிரதிநிதிகளும் இதில் பங்கேற்றனர். இந்த நிகழ்வில் எதிர்க்கட்சித் தலைவர் உரையாற்றும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரசு ஆட்சிக்கு வந்தவுடனேயே கோடீஸ்வரர்களுக்கு வரிச்சலுகை வழங்கி நாட்டின் அழிவுக்கான கதவைத் திறந்தார்கள். அதனோடு நிற்காமல் சீனி மோசடி, தேங்காய் எண்ணெய் ஊழல், பூண்டு ஊழல் என மோசடிகளுக்கே இடமளித்தார்கள்.

அன்று மத்திய வங்கி மோசடி குறித்து கூச்சலிட்ட தினேஷ் குணவர்தன இன்று பிரதமராக உள்ளார். மத்திய வங்கி மோசடியை விட பாரதூரமான சீனி மோசடி குறித்து அரச தரப்பினர் மௌனமாக இருக்கின்றனர். ஒட்டுமொத்த மக்களும் இன்று பாரிய அனர்த்தத்தை எதிர்நோக்கியுள்ளனர். இந்நிலை 2019ஆம் ஆண்டு மக்கள் எடுத்த தவறான தீர்மானங்களின் விளைவே ஆகும்.

இந்நாட்டில் ஜனநாயக உரிமையைக்கோரி போராடிய இளைஞர்களுக்கு எதிராகச் செயற்பட்டு அவர்களை ஒடுக்கி நாட்டைக் கட்டியெழுப்ப முடியாது. இவ்வாறான கேவலமான வேலைத் திட்டங்களை ஐக்கிய மக்கள் சக்தி உட்பட எதிர்க்கட்சியினர் எதிர்க்கின்றனர்.

இன்று, அவரும் அப்படித்தான் இவரும் அப்படித்தான் எனக் கூறி தம்மைச் சுத்தப்படுத்த முயலும் சில குழுக்கள் சுனாமி திருடர்களை இந்நாட்டின் ஜனாதிபதிகளாக்கியமையை நாம் மறந்துவிடக் கூடாது -என்றார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்-
076 443 8622



# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 3000
மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
இணையம் – onlinekathir.com

## நாடு உருப்பட வாய்ப்பு

இலங்கையின் அரசியல் கள நிலைமை தொடர்பாக தமிழ் முற்போக்கு முன்னணியின் தலைவரும், கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் மிக முக்கியமான விடயம் ஒன்றைச் சுட்டிக்காட்டி இருக்கின்றார்.

அவர் தலைநகர மாவட்டத்தில் எம்.பியும் கூட. மும்மொழி ஆளுமை மிக்கவர். எல்லா மொழியினருடனும், மதத்தினருடனும், இனத்தினருடனும் உறவுகளைப் பேணி, மரியாதையுடன் பழகுபவர். இவ்விடயத்தில் அவரின் அரசியல் கணிப்பீடு சரியானதே.

“விழுந்து கிடக்கும் நாட்டை மீட்டு, சரியான திசைக்கு அதை வழி நடத்த கடவுள் கொடுத்த சந்தர்ப்பம் இது!” – என்று அவர் சுட்டியிருக்கின்றார்.

தீக்குச்சைக் கொண்டு விளக்கையும் ஏற்றலாம்; வீட்டையும் எரிக்கலாம்.

அத்தகைய தீக்குச்சுதான் இன்று நமது அரசியல் தலைவர்களிடம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதைத்தான் கடவுள் தந்த அற்புத – அதிசய – சந்தர்ப்பம் என்று மனோ கணேசன் சுட்டுகிறார்.

இந்த வாய்ப்பை அழகிய கோலமாக வரைவதும், அல்லது அதை அலங்கோலமாக்கி வீணாக்குவதும் நம் கைகளில்தான் உள்ளன என்கின்றார் அவர்.

பெரும் நெருக்கடிக்கு மத்தியிலும், நாட்டின் சகல தரப்புகளும் ஒன்றிணைந்து, புதிய அரசியல் பாரம்பரியத்தின் கீழ், நாட்டை ஒரு புதிய எழுச்சி மிகுந்த திசையில் நடத்துவதற்கான வாய்ப்பு அதிசய சந்தர்ப்பமாகக் கிட்டியிருக்கின்றது என்று கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு அளித்த போட்டியில் மனோ கணேசன் குறிப்பிட்டு இருக்கிறார்.

சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கும், மனித உரிமைகளை மீறி சட்டத் துஷ்பிரயோகம் செய்வதற்கும் இடையில் மெல்லிய வேறுபாடு – இடைவெளிதான் – உண்டு. இந்த இடைவெளி மீண்டும் மீறப்படுமானால் நாடு மீட்கப்படவே முடியாத நிலைமையை நோக்கித்தான் மேலும் வீழும் என்ற அவரது வார்த்தைகள் முற்றிலும் உண்மை.

இப்போதைய நாடாளுமன்றம் தார்மீக ரீதியில் தனது தகைமையை இழந்து விட்டது என்றாலும், அதற்கு இன்னும் சட்ட வலிமை உள்ளது. இந்த சமயத்தில் அரசமைப்புச் சீர்திருத்தங்களையும் நல்லிணக்கத்திற்கான நடவடிக்கைகளையும் நடைமுறைக்குக் கொண்டு வர முயற்சிக்கலாம் என்று மனோ கணேசன் வலியுறுத்துகின்ற விடயம் யதார்த்த பூர்வமானது.

நாடு திருந்துவதற்கு – பின்னடைவிலிருந்து மீள்வதற்கு – மிக முக்கியமான விடயம் ஒன்றையும் அவர் சுட்டிக் காட்டுகின்றார்.

பேரினவாத வெறியில் துடித்துக் கொண்டிருக்கும் தென்னிலங்கைத் தரப்புகளுக்கு அந்த முக்கிய ஆலோசனை காதில் ஏறுமா என்பது கேள்விக்குறியே.

அரசியலிலும், அரசாட்சியிலும் மதத்தை எப்போதுமே தள்ளி வைத்துக் கொள்ளுங்கள் என்ற மனோ கணேசனின் கூற்று, இந்த நாட்டின் மீள் எழுச்சிக்கும் நல்லிணக்கத்துக்கும் மிக முக்கியமான விடயம்.

நாட்டின் தீராத தலைவலிகளுக்கு எல்லாம் – முக்கிய பிரச்சினைகளுக்கு எல்லாம் – இந்த நெருக்கடிக் கட்டத்துக்கு எல்லாம் – ஒரே பின்புல பிரதான காரணி இந்த மதவெறிதான்.

மனோ கணேசன் எம்.பி. கூறும் இந்த விடயங்கள் ஆட்சியாளர்கள் மற்றும் தென்னிலங்கை பிரதான கட்சிகளின் காதில் ஏறுமா என்பது கேள்வியே.

ஏறினால் நாடு உருப்படும். இல்லையேல் தொடர்ந்து பேரழிவும் பேரிழப்பும் தவிர்க்க முடியாதவையாகவே இருக்கும்.

## 2 ஆயிரத்துக்கும் அதிகமான பேக்கரிகள் நாடளாவிய ரீதியில் மூடப்பட்டுள்ளனவாம்!

### உரிமையாளர் சங்கம் தெரிவிப்பு

தற்போதைய சூழ்நிலை காரணமாக நாடளாவிய ரீதியில் இரண்டாயிரத்திற்கும் அதிகமான பேக்கரிகள் மூடப்பட்டுள்ளன.

அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் என்.கே. ஜெயவர்தன இதனைத் தெரிவித்துள்ளார்.

தற்போது சந்தையில் ஒரு கிலோகிராம் கோதுமை மாவின் விலை 350 ரூபாவாக அதிகரித்துள்ளது.

மொத்த சந்தையில் தற்போது 50 கிலோகிராம் கோதுமை மா 17 ஆயிரம் ரூபாவிற்கு மேல் விற்பனை செய்யப்படுவதாக அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

## ஒரு லட்சத்து 71 ஆயிரத்து 497 பேர் பல்கலைக்கழக அனுமதிக்குத் தகுதி!

2021 ஆம் ஆண்டுக்கான உயர்தர பரீட்சை பெறுபேறுகளை நேற்று (திங்கட்கிழமை) முதல் பதிவிறக்கம் செய்ய அதிபர்களுக்கு அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் எல்.எம்.டி. தர்மசேன இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

இரண்டாம் மற்றும் மூன்றாம் முறை உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள விண்ணப்பதாரர்கள் எதிர்வரும் முதலாம் திகதி முதல் 8 ஆம் திகதி வரை இணையம் ஊடாக விண்ணப்பிக்க அவகாசம் வழங்கப்பட்டுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார். 2021ஆம் ஆண்டுக்கான உயர்தர பரீட்சை முடிவுகள் ஞாயிற்றுக்கிழமை வெளியிடப்பட்டன.

2 லட்சத்து 72 ஆயிரத்து 682 விண்ணப்பதாரர்கள் பரீட்சைக்குத் தோற்றியிருந்தனர். அவர்களில் ஒரு லட்சத்து 71 ஆயிரத்து 497 பேர் பல்கலைக்கழக அனுமதிக்குத் தகுதி பெற்றுள்ளனர்.

விண்ணப்பித்த 49 பேரின் பெறுபேறுகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## கொழும்புக்கு அழைக்கப்பட்டனர் பெரமுனவின் மாவட்ட தலைவர்கள்!

ஆளும் கட்சியின் நாடாளுமன்ற குழு கூட்டம் இன்று (திங்கட்கிழமை) மாலை 5 மணிக்கு நடைபெற உள்ளதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் ஜனாதிபதி செயலகத்தில் இந்த சந்திப்பு நடைபெறவுள்ளது.

இதேவேளை, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் மாவட்டத் தலைவர்கள் இன்று முதல் கொழும்புக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

எதிர்வரும் அரசியல் விவகாரங்கள் தொடர்பில் கலந்துரையாடுவதற்காகவே இந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

## உள்நாட்டு பால் உற்பத்தி பொருள்களுக்கு முன்னுரிமை

உள்நாட்டு பால் உற்பத்திப் பொருள்களுக்கு முன்னுரிமை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இறக்குமதித் தடை காரணமாக சந்தையில் ஏற்படக்கூடிய பால் உற்பத்திப் பொருள்களின் பற்றாக்குறையைத் தவிர்க்கும் வகையில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய உள்நாட்டில் பால் மா மற்றும் அதனுடன் தொடர்புடைய பொருள்;களுக்கு முன்னுரிமை அளிக்குமாறு உள்நாட்டு நிறுவனங்களுக்கு அரசாங்கம் அறிவுறுத்தியுள்ளது.

## தும்பங்கேணிச் சந்தி வளைவில் மோட்டார் சைக்கிளுடன் சடலம்

### விபத்து மரணம் எனச் சந்தேகம்



மட்டக்களப்பு வெல்லாவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் ஆண் ஒருவரின் சடலம் இன்று காலை கண்டெடுக்கப்பட்டுள்ளது.

வெல்லாவெளி, அம்பிளாந்துறை பிரதான வீதியில் தும்பங்கேணிச் சந்தியின் வளைவு பகுதியில் இந்த சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளதாக வெல்லாவெளி பொலிஸார் தெரிவித்தனர்.


இதன்போது மோட்டார் சைக்கிள் ஒன்றும் கைப்பற்றப்பட்டுள்ளது.

பாலையடிவட்டையிலிருந்து கடுக்காமுனை நோக்கி நேற்று இரவு சென்ற பாலையடிவட்டை 37ஆம் கிராமத்தை சேர்ந்த, மூன்று பிள்ளைகளின் தந்தையான 36 வயதுடைய ரிசிகரன் என்பவரே சடலமாக கண்டெடுக்கப்பட்டுள்ளார் என்று உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த வளைவுப் பகுதியில் வேகமாகச் சென்ற போது விபத்து இடம்பெற்றிருக்கலாம் என தெரிவித்துள்ள பொலிஸார் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். சம்பவ இடத்திற்கு வருகைதந்த மட்டக்க ளப்பு மாவட்ட குற்றத்தடவியல் பிரிவு பொலிஸாரும் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு
திங்கட்கிழமை 29.08.2022

# அமெரிக்காவின் போர்க் கப்பல்கள் தைவான் ஜலசந்தி வழியாக நகர்வு




## சீனா கடும் எதிர்ப்பு; ஆத்திரம்

தைவான் ஜலசந்தி வழியாக அமெரிக்க போர்க் கப்பல்கள் சென்றமைக்கு சீனா கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளது.

தைவான்-சீனா இடையே அதிகரித்து வரும் பதற்றத்துக்கு மத்தியில் தைவான் ஜலசந்தி வழியாக அமெரிக்கப் போர்க்கப்பல்கள் சென்றமை பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. இதற்கு சீனா கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளது.

உள்நாட்டு போருக்கு பின்னர் சீனாவிடம் இருந்து பிரிந்து சென்ற தைவான் தன்னை ஒரு சுதந்திர நாடாக கருதுகிறது. ஆனால் சீனா அப்படி நினைக்கவில்லை. தைவான் இன்னமும் தங்கள் நாட்டின் ஒரு பகுதியே என சீனா கூறி வருகிறது. தைவானை மீண்டும் தன்னுடன் இணைக்க சீனா துடிக்கிறது.

இதற்கிடையில் தைவானின் சுதந்திரத்தை ஆதரிக்கும் அமெரிக்கா தைவானுக்கு பல்வேறு வழிகளில் உதவி செய்து வருகிறது. இது தைவானை சொந்தம் கொண்டாடும் சீனாவுக்கு கடும் ஆத்திரத்தை ஏற்படுத்தி வருகிறது. இதனால் இந்த விவகாரத்தில் அமெரிக்கா – சீனா இடையே கடுமையான மோதல் நீடிக்கிறது.

கடந்த மே மாதம் ஜப்பான் சென்றிருந்த அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் சீனா பலவந்தமாக தைவானை கைப்பற்ற முயன்றால், அமெரிக்கப் படைகள் தைவானை இராணுவ ரீதியாகப் பாதுகாக்கும் என எச்சரித்ததை தொடர்ந்து இந்த மோதல் தீவிரமடைந்தது.

இந்த சூழலில் சீனாவின் கடும் எதிர்ப்பை மீறி கடந்த 2 ஆம் திகதி அமெரிக்க நாடாளுமன்ற சபாநாயகர் நான்சி பெலோசி தைவானுக்குச் சென்றார். இதில் ஆத்திரமடைந்த சீனா தைவானை நாலாபுறமும் சுற்றி வளைத்து ஒரு வார காலம் தீவிர போர்ப்பயிற்சியில் ஈடுபட்டது.

இதனால் தைவான் – சீனா இடையிலான பதற்றம் உச்சக்கட்டத்தை எட்டியது. ஆனால் அதன் பின்னரும் சீனாவை மேலும் ஆத்திரப்படுத்தும் வகையில் அமெரிக்க எம்.பி.க்கள் அடுத்தடுத்து தைவானுக்கு பயணம் மேற்கொண்டு வருகின்றனர். இந்த நிலையில், சீனாவையும், தைவானையும் பிரிக்கும், தைவான் ஜலசந்தி வழியாக அமெரிக்காவின் 2 போர்க்கப்பல்கள் சென்றதாக அமெரிக்க கடற்படை தெரிவித்துள்ளது.

நான்சி பெலோசியின் தைவான் பயணத்தால் ஏற்பட்ட பதற்றத்துக்கு பிறகு அமெரிக்க போர்க்கப்பல் தைவான் ஜலசந்தியைக் கடந்து சென்றது இதுவே முதல் முறையாகும்.

இது தொடர்பாக அமெரிக்க கடற்படை வெளியிட்டுள்ள அறிக்கையில், சர்வதேச கடற்பகுதியில் சுதந்திரமான வழிசெலுத்தலை நிரூபிக்கும் விதமாக அமெரிக்க கடற்படைக்கு சொந்தமான ஏவுகணைகள் தாங்கிய 'யு.எஸ்.எஸ். ஆன்டிடம்' மற்றும் யு.எஸ்.எஸ். 'சான்ஸ்லர்ஸ்வில்லே' ஆகிய போர்க்கப்பல்கள் தைவான் ஜலசந்தி வழியாக சென்றன என தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் இது ஒரு ஆத்திரமூட்டும் செயல் எனக் கூறி சீனா கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. சீன இராணுவத்தின் கிழக்கு கட்டளை பிரிவின் செய்தித் தொடர்பாளர் ஷி யி இதுபற்றி கூறுகையில், அமெரிக்க போர்க்கப்பல்களின் நகர்வை தீவிரமாக கண்காணித்தோம். கிழக்கு கட்டளை பிரிவின் துருப்புக்கள் அதிக விழிப்புடன் உள்ளன. எந்த நேரத்திலும் எந்த ஆத்திரமூட்டலையும் முறியடிக்க படைகள் தயாராக உள்ளன என்றார்.

# தைவானின் எல்லையில் சீனா இராணுவக் குவிப்பு

## போர்ப் பதற்றம் நீடிப்பு



தைவான் எல்லையில் சீன போர் கப்பல்கள், விமானங்களைக் குவித்துள்ளதாக அந்நாட்டு இராணுவம் குற்றம் சாட்டியுள்ளது. தீவு நாடான தைவானை சீனா சொந்தம் கொண்டாடி வரும் வேளையில் கடந்த 2 ஆம் திகதி அமெரிக்க நாடாளுமன்ற சபாநாயகர் நான்சி பெலோசி சீனாவின் எதிர்ப்பை மீறி தைவானுக்குச் சென்றார். அவரை தொடர்ந்து அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமெரிக்காவின் இண்டியானா மாகாண கவர்னர் என அமெரிக்க உயர்மட்ட அரசியல் தலைவர்கள் அடுத்தடுத்து தைவானுக்கு பயணம் மேற்கொண்டனர்.

இதனால் ஆத்திரமடைந்துள்ள சீனா அடிக்கடி தைவானை சுற்றி கடல் மற்றும் வான்பரப்பில் போர்ப்பயிற்சியில் ஈடுபட்டு வருகிறது. இந்த நிலையில் தங்கள் நாட்டின் எல்லையில் சீனா தனது போர் கப்பல்கள் மற்றும் விமானங்களை குவித்துள்ளதாக தைவான் இராணுவம் குற்றம் சாட்டியுள்ளது.

இது குறித்து தைவான் இராணுவ அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், சீனாஇராணுவத்தின் 8 விமானம் தாங்கி போர் கப்பல்கள், 25 போர் விமானங்கள் தைவானை சுற்றி நிறுத்தப்பட்டுள்ளன. நிலைமையை உன்னிப்பாக கவனித்து வரும் தைவான் இராணுவம் பதில் நடவடிக்கைக்கு தயாராக உள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இரு பத்திரிகைச் செய்தியாளர்கள் கொலம்பியாவில் சுட்டுக் கொலை!



கொலம்பியாவில் திருவிழா நிகழ்ச்சியை படம் பிடித்து விட்டு திரும்பிய ஆணும் பெண்ணுமான பத்திரிகையாளர்கள் இருவர் மர்ம நபர்களால் சுட்டு கொல்லப்பட்டு உள்ளனர்.

கொலம்பியா நாட்டின் கரீபியன் கடலோர பகுதியில் உள்ள வடக்கு நகரான பண்டேசியன் நகரில் சொல் டிஜிட்டல் என்ற பெயரிலான வலைதள செய்தி நிறுவனம் ஒன்று செயல்பட்டு வருகிறது. இதில், லீனர் மோன்டிரோ ஆர்டிகா (வயது 37) மற்றும் திலியா கான்ட்ரிராஸ் கேன்டில்லோ (வயது 39) ஆகிய இருவர் செய்தியாளர்களாகப் பணியாற்றி வந்துள்ளனர். இந்நிலையில், அவர்கள் இருவரும் திருவிழா ஒன்றைப் படம் பிடிக்க சென்றுள்ளனர். சான்டா ரோசா டி லிமா பகுதியில் நடந்த திருவிழாவில் செய்திகளை சேகரித்து கொண்டு திரும்பி கொண்டிருந்தனர். இந்நிலையில், மோட்டார் சைக்கிள் ஒன்றில் வந்த மர்ம நபர்கள் அவர்களை நோக்கி துப்பாக்கியால் சுட்டு விட்டுத் தப்பியோடி உள்ளனர். இந்த சம்பவத்தில் காயமடைந்த 2 பேரும் உயிரிழந்துவிட்டனர். திருவிழாவில் ஏற்பட்ட வாக்குவாதம் முற்றியதில் இந்த துப்பாக்கி சூடு சம்பவம் நடந்திருக்கும் என பொலிஸார் கூறியுள்ளனர். எனினும், பத்திரிகையாளர்கள் என்ற அடிப்படையில் விசாரணை நடத்தும்படி ப்ரீ பிரஸ் பவுண்டேசன் என்ற அமைப்பு சார்பில் பொலிஸாருக்கு வேண்டுகோள் விடப்பட்டு உள்ளது. கொலம்பியாவில் கடந்த ஆண்டு வன்முறை, படுகொலை உள்ளிட்டவற்றால் பத்திரிகையாளர்கள் 768 பேர் கடுமையாக பாதிக்கப்பட்டு உள்ளனர் என அந்த அமைப்பு தெரிவித்து உள்ளது.

# உணவுத் திருவிழாக் கூட்டத்துக்கிடையே லொறி புகுந்ததில் அறுவர் நசுங்கிச் சாவு

நெதர்லாந்தில் உணவுத் திருவிழா கூட்டத்துக்குள் லொறி புகுந்த விபத்தில் சிக்கி 6 பேர் உடல் நசுங்கி உயிரிழந்தனர்.

நெதர்லாந்து நாட்டின் தெற்கு பகுதியில் உள்ள நியூ பெய்ஜர்லாந்து நகரில் ஆற்றங்கரையோரமாக திறந்தவெளியில் உணவு திருவிழா நடைபெற்றது. இதில் ஏராளமான உணவு பிரியர்கள் கலந்து கொண்டு தீயில் வாட்டிக் கொடுக்கப்படும் அசைவ உணவுகளை ருசித்து கொண்டிருந்தனர். அப்போது அந்த வழியாக வந்த சரக்கு லொறி ஒன்று திடீரென சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து சாலையை விட்டு ஆற்றங்கரையில் இறங்கியது. அதன் பின்னரும் நிற்காமல் ஓடிய லொறி உணவு திருவிழாவில் கலந்து கொண்டிருந்த மக்கள் கூட்டத்துக்குள் புகுந்தது. இதில் பலர் லொறிச் சக்கரங்களில் சிக்கி நசுங்கினர். இந்தக் கோர விபத்தில் 6 பேர் சம்பவ இடத்திலேயே உடல் நசுங்கி உயிரிழந்தனர்.

மேலும் டசின் கணக்கானோர் படுகாயம் அடைந்தனர். அவர்கள் அனைவரும் உடனடியாக மீட்கப்பட்டு சிகிச்சைக்கு ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டனர்.

அவர்களில் பலரது நிலைமை கவலைக்கிடமாக இருப்பதால் பலி எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் என அஞ்சப்படுகிறது. இதனிடையே விபத்தை ஏற்படுத்திய சரக்கு லொறியின் சாரதியைப் பொலிஸார் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# ராகுல் காந்தியின் நடை பயணத்தை தமிழக முதல்வர் தொடக்கி வைப்பார்







சென்னை,ஓக.29

“காங்கிரஸ் எம்.பியான ராகுல் காந்தி கன்னியாகுமரி முதல் காஷ்மீர் வரை, செப்ரெம்பர் 7 இல் தொடங்கும் நடை பயணத்தை, முதல்வர் ஸ்டாலின் தொடக்கி வைப்பார்,” எனத் தமிழகக் காங்கிரஸ் தலைவர் அழகிரி கூறினார். சென்னையில் காங் கிரஸ் மாநிலத் தலைமையகமான சத்தியமூர்த்திபவனில் அவர் பேட்டியளித்தார்.

அப்போது அவர் கூறியவை வருமாறு:–

ராகுல் காந்தி நடை பயணத்தை கன்னியா குமரியில் உள்ள காந்தி நினைவிடத்தில் இருந்து தொடங்குகிறார். ராகுலிடம், தமிழக முதல்வர் ஸ்டாலின் தேசியக் கொடியை வழங்கி, நடைபயணத்தை தொடக்கி வைக்கிறார். அன்றைய தினம், கன்னியாகுமரியில் ஒரு பொதுக் கூட்டம் நடைபெற உள்ளது. நடைபயணத்தில் ராகுலுடன் ஒவ்வொரு நாளும் கூட்டணி கட்சிகளின் தலைவர்கள், 10 நிமிடம் வரை நடை பயணம் மேற்கொண்டு, தங்கள் கருத் துக்களை வெளியிட்டு பாராட்டு தெரிவிக்க உள்ளனர். சமூகத்தில் விழிப்புணர்வு ஏற்படுத்த, பார்வையற்றோரும் ராகுலுடன் சிறிது தூரம் நடக்க உள்ளனர்.

நடைபயணத்தின் போது, ராகுலுக்குக் கதர் ஆடையை, குமரி அனந்தன் வழங்குகிறார். குலாம்நபி ஆசாத் கட்சியில் இருந்து விலகி உள்ளார். பழுத்த மட்டை, மரத்தில் இருந்து கீழே விழுவது இயற்கை. மரம் பழுத்து குலுங்குகிற போதுதான் பறவைகள் இருக்கும். மரத்தில் இந்த சீசனில் பழம் இல்லாததால், சில பறவைகள் பறந்து செல்கின்றன. – இவ்வாறு அழகிரி கூறினார்.

# பிரமாண்ட இரட்டைக் கோபுரங்கள் நெய்டாவில் வெடிவைத்துத் தகர்ப்பு

## விதிமுறையை மீறிக் கட்டப்பட்டவையாம்





நொய்டாவில் விதிமுறையை மீறிக் கட்டப்பட்ட பிரமாண்ட இரட்டை கோபுரங்கள் நேற்று வெடிவைத்துத் தகர்க்கப்பட்டன. இதனால், அந்த பகுதி புகை மண்டலமாக காட்சியளித்தது.

உத்தர பிரதேச மாநிலம் நொய்டாவில் ’சூப்பர் டெக்’ என்ற நிறுவனத்தின் சார்பில் பிரமாண்ட இரட்டை கோபுர குடியிருப்புகள் கட்டப்பட்டன. இதில் ’அபெக்ஸ்’ என்ற கோபுரம், 32 மாடிகளை உடையது. இதன் உயரம் 328 அடி. மற்றொரு கோபுரத்தின் பெயர் சியான். இது, 31 மாடிகளை உடையது; உயரம் 318 அடி. 900 குடியிருப்புகள் அதில் இருந்தன.

இந்த இரட்டை கோபுரங்கள் விதிமுறையை மீறி கட்டப்பட்டன என வழக்குத் தொடரப்பட்டது. கட்டுமானம் சட்டவிரோதமாக கட்டப்பட்டு உள்ளதாகவும், புவியியல் சார்ந்து கட்டப்படவில்லை என்றும் புகார் எழுந்தது.

இதையடுத்து இரட்டை கோபுரங்களை இடிக்கும்படியும் உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது. இடிப்புக்குவிதிக்கப்பட்ட கெடு, பலகாரணங்களால் நீட்டிக்கப்பட்டது. இறுதியாக, நேற்று கட்டாயமாக இரு கோபுரங்களையும் இடிக்க வேண்டும் என்றும் உத்தரவிடப்பட்டது. இரட்டை கோபுரத்தை ‘அடிபை இன்ஜினியரிங்’ என்ற நிறுவனத்திடம் இடிப்பு பணி ஒப்படைக்கப்பட்டது. சரியாக, நேற்றுப் பிற்பகல் 2:30க்கு கட்டடம் இடிக்கப்பட்டன. 9 வினாடிகளில் ஒட்டுமொத்த கட்டடமும் இடிந்து விழுந்தது.

இந்த கோபுரங்களை இடிக்க, 3,700 கிலோ வெடி மருந்துகள் பயன்படுத்தப்பட்டன. இவை, ஹரியானா மாநிலத்தில் இருந்து வரவழைக்கப்பட்டன. ’நீர்வீழ்ச்சி வெடிப்பு’ என்ற தொழில்நுட்பத்தை பயன்படுத்தி கட்டடங்கள் இடிக்கப்பட்டன. இதன் படி, வெடிமருந்துகள் கட்டடத்தின் உள்பகுதிக்குள் வைக்கப்பட்டன. கட்டடம் இடிந்து விழுந்ததும், உள்புறமாகவே விழும் வகையிலும், வெளிப்புறத்தில் எந்த பாதிப்பும் ஏற்படாத வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இந்த இடிப்பால், 55 ஆயிரம் டன் கட்டட இடிபாடு குப்பை குவியும். இவற்றை அகற்ற, மூன்று மாதங்களுக்கு மேல் ஆகும். தகர்ப்பு பணிகளில், 100க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் ஈடுபடுத்தப்பட்டனர். கட்டடங்கள் இடிக்கப்பட்டதால், அந்த பகுதி புகை மண்டலமாக காட்சியளித்தது. அதனை தண்ணீரை பீய்ச்சி அடித்து கட்டுப்படுத்தும் பணியில் தீயணைப்பு வீரர்கள் ஈடுபட்டுள்ளனர். கட்டடம், அந்த இடத்திலேயே நொறுங்கி விழுந்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இடிக்கப்பட்ட இரட்டை கோபுரத்தை சுற்றி திரியும் நாய்களை முன்னதாக மீட்கும் முயற்சியில் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் ஈடுபட்டன. எந்த விலங்கும் பாதிக்கப்படக்கூடாது என்பதற்காக 50 தெருநாய்களை மீட்டுள்ளனர் என அவர்கள் தெரிவித்தனர்.

இந்தக் கட்டடத்திற்கு அருகே உள்ள சில கட்டடங்களில் ஜன்னல் மற்றும் கண்ணாடிகள் அதிர்வினால்சேதமடைந்தனஎனக்கூறபடுகிறது.









# கேரள நிலச்சரிவில் சிக்கி ஒரே குடும்பத்தில் ஐவர் பலி

கேரளாவில் தென்மேற்கு பருவமழை காரணமாக மலை கிராமங்களில் நிலச்சரிவு ஏற்படும் அபாயம் உள்ளதால், மக்கள் பாதுகாப்பான இடத்திற்கு செல்ல வேண்டும் எனவும், இரவு நேர பயணங்களை தவிர்க்க வேண்டும் எனவும் அம்மாநில அரசு எச்சரித்திருந்தது.

இந்த நிலையில் கனமழை காரணமாக இடுக்கி மாவட்டம் தொடுபுழா தாலுகாவில் உள்ள குடையாத்தூர் பகுதியில் நிலச்சரிவு ஏற்பட்டது. இந்த நிலச்சரிவால் வீடு ஒன்று, மண்ணில் புதைந்தது. அதில் ஐவர் உயிரிழந்தனர் எனக் கூறப்படுகிறது.

இது குறித்த தகவலின் பேரில் விரைந்து வந்த பொலிஸார் மற்றும் மீட்புபடையினர் மீட்பு பணியில் ஈடுபட்டனர். நீண்ட தேடுதலுக்கு பிறகு இன்று அதிகாலை ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூன்று பேரின் உடல்கள் மீட்கப்பட்டன. மற்றைய இருவரைத் தேடும் பணியில் மீட்புபடையினர் தொடர்ந்து தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

மலியக்கல் சோமன், தாயார் தங்கம்மா, மனைவி சிஜி, மகள் ஷிமா, ஷிமாவின் மகன் தேவானந்த் (வயது 4) ஆகியோரே உயிரிழந்துள்ளனர்.

# கிருஷ்ணரின் சிலையை யமுனையில் கரைக்கப் போன ஐவர் மூழ்கிச் சாவு

உத்தரபிரதேச மாநிலம் கிரேட்டர் நொய்டா பகுதியை சேர்ந்த ஆறு பேர் கிருஷ்ண ஜெயந்தியையொட்டி கிருஷ்ணர் சிலையை அங்குள்ள யமுனை ஆற்றில் கரைக்கச் சென்றனர். ஆற்றின் நடுவில் கிருஷ்ணர் சிலை சிக்கி கொண்டது. அதனை மீட்க 6 பேரும் முயற்சித்தனர். அப்போது ஆற்றில் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடியதால் 6 பேரும் அடித்து செல்லப்பட்டனர். இதில் ஒருவர் மட்டும் நீந்திக் கரை சேர்ந்தார். மற்ற 5 பேரும் ஆற்றில் மூழ்கினார்கள். அவர்கள் கதி என்ன என்று தெரியாமல் இருந்தது. இது பற்றி அறிந்ததும் தீயணைப்பு படையினர் மற்றும் பொலிஸார் அங்கு விரைந்து சென்று 5 பேரை தேடும் பணியில் ஈடுபட்டனர்.

ஆனால் ஆற்றில் மூழ்கிய அங்கித் (வயது 20), லக்கி (20), லலித் (20), பீரு (20), ருத்ராஜ் (20) ஆகிய ஐந்து பேரும் பிணமாக மீட்கப்பட்டனர். பின்னர் அவர்களது உடல்கள் பிரேத பரிசோதனைக்காக ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

# நற்பிட்டிமுனை சேனைக்குடியிருப்பில் ஆயுள்வேத இலவச மருத்துவ முகாம்





(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

சுகாதார மற்றும் சுதேச வைத்திய அமைச்சின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலுக்கு அமைய கல்முனை வடக்கு பிரதேச செயலகம் ஏற்பாடு செய்த பொதுமக்களுக்கான இலவச ஆயுள்வேத மருத்துவ முகாம் நேற்று முன்தினம் நற்பிட்டிமுனை – சேனைக் குடியிருப்பு விதாதா வள மத்திய நிலையத்தில் பிரதேச செயலாளர் ரி. ஜெ. அதிசயராஜ் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஐ.எல்.எம்.றிபாஸ் பிரதம அதிதியாக கலந்து கொண்டு பொது மக்களுக்கு ஆயுள்வேத வைத்திய சிகிச்சையின் முக்கியத்துவம் மற்றும் உணவு பழக்கங்களில் ஆயுர்வேத மருத்துவ உணவுகளை சேர்க்க வேண்டியதன் அவசியம் குறித்தும் விளக்கமளித்தார்.

இந்த இலவச ஆயுர்வேத வைத்திய முகாமில் பிராந்திய ஆயுர்வேத இணைப்பாளர் மருத்துவர் எம்.ஏ. நபீல், கல்முனை மாவட்ட ஆயுள்வேத வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர் மருத்துவர் எம். ஐ. இஸ்சாக், மாவட்ட ஆயுள்வேத வைத்தியசாலை மருத்துவ உத்தியோகத்தர்களான மருத்துவர் ஏ.எஸ்.என். சுஸான், மருத்துவர் என்.ரவிராஜனி ஆகியோர் பொதுமக்களுக்கு தேவையான சிகிச்சைகளை வழங்கியமையுடன் இலவச ஆயுர்வேத மருந்து வகைகளும் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டன.

இதில் நற்பிட்டிமுனை – சேனைக் குடியிருப்பு, கல்முனை போன்ற பிரதேசங்களைச் சேர்ந்த பொதுமக்கள் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.

சுதேச வைத்திய அபிவிருத்தி உத்தியோகத்தர் ஐ.எல். நூருல் ஹபீலா, கைத்தொழில் அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.எப்.கே.காமிலா ஆகியோரும் கலந்து கொண்டனர்.

## ‘முஸ்லிம் எய்ட்’ நிறுவன ஏற்பாட்டில் வாழ்வாதார உதவிகள் விநியோகம்

(ஹஸ்பர்)

குச்சவெளி பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட கிராமங்களில் வசிக்கும் வறிய, பின்தங்கிய குடும்பங்களின் வாழ்வாதாரத்தை நிலைபேறு கொண்டவையாக மேம்படுத்தும் நோக்குடன், விவசாய, மீன்பிடி மற்றும் சுயதொழில்களை மேற்கொள்வதற்கு அவசியமான பல லட்ச ரூபாய் பெறுமதியுடைய பலவகைப்பட்ட உபகரணங்கள் மற்றும் கருவிகளை முஸ்லிம் எய்ட் பயனாளிகளுக்கு வழங்கி வைக்கும் நிகழ்வு கடந்த விழாழனன்று நிலாவெளி அல் பத்தாஹ் மகாவித்தியாலத்தில் நடைபெற்றது.

முஸ்லிம் எய்ட் நிறுவனம் இந் நிகழ்ச்சித்திட்டத்தினை கடந்த இரண்டு வருடங்களாக குச்சவெளி பிரதேச செயலகப் பிரிவு கிராமங்களில் நடைமுறைப்படுத்தி வருகின்றது. இந் நிறுவனத்தின் இரண்டாம் கட்ட திட்டத்தின் ஒரு பகுதியாக இவ்வாழ்வாதார உதவிகள் அமைகின்றன.

இக்கையளிப்பு நிகழ்வில் திருகோணமலை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ஜே. எஸ். அருள்ராஜ் பிரதம அதிதியாகவும், குச்சவெளி பிரதேச செயலாளர் கே.குணநாதன், திருகோணமலை வலயக்கல்விப் பணிப்பாளர் எஸ்.சிறிதரன், முஸ்லிம் எய்ட் சிறிலங்கா தேசிய பணிப்பாளர் ஏ.சீ. பைசர்கான் மற்றும் விவசாயத் திணைக்கள பிரதி பணிப்பாளர் எம். பரமேஸ்வரன் ஆகியோர் விசேட அதீதிகளாகவும் பங்கேற்றுச் சிறப்பித்தனர்.

பாடசாலைகளை அடிப்படையாகக் கொண்டு பன்முகத் தன்மையுடைய விவசாயச்செய்கையை ஊக்குவிக்கும் நோக்குடன், குச்சவெளிப் பிரதேசத்திலுள்ள சில பாடசாலைகளில் விவசாய முயற்சிகளை ஊக்குவிக்கும் திட்டத்திற்கான விவசாய உபகரணங்கள் மற்றும் நீண்டகாலப் பயிர்களுக்கான விதைகள் விநியோகிக்கப்பட்டன. பாடசாலை சமூகமும் முஸ்லிம் எய்ட் ஊழியர்களும் இணைந்து இவ்விநியோக நிகழ்வை சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர்.





## மட்டக்களப்பில் நூல் வெளியீடு

(க.கிருபாகரன்)

பொன்.செல்வநாயகம் எழுதிய 'மட்டக்களப்பு தமிழக பாரம்பரிய மருத்துவம்' புத்தக வெளியீட்டு விழா நேற்று காலை எழுத்தாளர் ஊக்குவிப்பு மையத்தின் ஏற்பாட்டில் மட்டக்களப்பு தேவநாயகம் மண்டபத்தில் நடைபெற்றது.

நிகழ்விற்கு வருகை தந்திருந்த அனைவருக்கும் வெளியிடப்பட நூல் வழங்கி வைக்கப்பட்டது. புத்தக வடிவமைப்பாளர் கௌரவிக்கப்பட்டமையை தொடர்ந்து நூலாசிரியர் கௌரவிப்பு நிகழ்வும் நடைபெற்றது. இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் களான சந்திரகாந்தன் மற்றும் கோவிந்தன் கருணாகரன், மட்டக்களப்பு மாவட்ட செயலாளர் க.கருணாகரம், மட்டக்களப்பு மாநகர சபை முதல்வர் தியாகராஜா சரவணபவன், பிரதேச செயலாளர்கள், துறைசார் கலைஞர்கள் மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

## தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தில் பக்திபூர்வமாக கொடியேற்றம்




(க.கிருபாகரன்)

கிழக்கிலங்கையின் வரலாற்று புகழ்மிக்க ஆலயங்களுள் ஒன்றான மூர்த்தி, தலம், தீர்த்தம் என ஒருங்கே அமையப்பெற்ற மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலய வருடாந்த மகோற்சம் இன்று கொடியேற்றத்துடன் பக்திபூர்வமாக ஆரம்பமானது.

இன்று காலை விசேட யாக பூசை இடம்பெற்றது. மூல மூர்த்திக்கு கும்ப அபிகேம் செய்யப்பட்டது. அதனைத்தொடர்ந்து மகோற்சவ கொடியேற்றத்துக்கான கொடிச்சீலை ஆலயத்தினை ஊர்வலமாக கொண்டுவரப்பட்டு தம்பத்துக்கு அருகில் விசேட பூசைகள் இடம்பெற்றன.

கொடியேற்றம் சத்தியானந்தமூர்த்தி குருக்களினால் முன்னெடுக்கப்பட்டது. அதனைத்தொடர்ந்து தம்பத்துக்கு அபிகேமும் செய்யப்பட்டு விசேட பூசையும் இடம்பெற்று பிரதம குருவினால் அனைவருக்கும் ஆசிர்வாதம் வழங்கப்பட்டது. இதனை தொடர்ந்து சுவாமி உள் வீதியுலா வந்து வசந்த மண்டபத்தில் விசேட பூசைகள் இடம்பெற்றன. பல இடங்களிலும் இருந்து பக்தர்கள் வந்து கலந்து கொண்டனர்.

# புதிய மாணவர்களின் வரவேற்பு





புத்தளம் ஆனமடுவ பிரதேசத்தில் அமைந்துள்ள ஹம்மாந்தளுவ அஹதிய்யா சன்மார்க்கப் போதனா பீட பாடசாலையின் புதிய மாணவர்களின் வரவேற்பும், முஹர்ரம் விழாவும் நிகழ்வும் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) அஹதிய்யா பாடசாலையின் அதிபர் ஏ.எம்.மஹ்பூப் தலைமையில் விமரிசையாக நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக அகில இலங்கை அஹதிய்யா பாடசாலைகளின் மத்திய சம்மேளனத்தின் பிரதித் தலைவரும் புத்தளம் மாவட்ட அஹதிய்யா பாடசாலைகளின் சம்மேளன பொதுச் செயலாளருமான பாரூக் பதீன் ஆசிரியரும், விடே அதிதிகளாக அஹதிய்யா பாடசாலைகளின் புத்தளம் மாவட்ட சம்மேளன இணைப்பானரும் எருக்களம்பிட்டி அஹதிய்யா பாடசாலையின் அதிபருமான அஷ்ஷேஹ் ஏ.எச். எம்.பஸ்மி, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன சிரேஷ்ட பணிப்பாளர் எம்.எச் .எம்.ஹாரிஸ், அஷ்ஷேஹ் ஷியாம்,(ரவாஹி) அஷ்ஷேஹ் இல்ஹாம் அஷ்ஷேஹ் பாரிஸ் ( பக்ரி) ஆகியோரும் கலந்து கொண்டு உரைகளையும் நிகழ்த்தினர்.

அஹதிய்யா பாடசாலையின் செயலாளர் எம்.அஸ்வர்,எம்.எம்.ஷிபான் ஆசிரியர், மௌலவியா ,நஸீஹா ஹாரிஸ் ஆசிரியை மற்றும் பள்ளிவாசல் நிறுவாகிகள் பாடசாலை ஆசிரியர்கள் பழைய மாணவர்கள், பெற்றோர்கள் நலன் விரும்பிகள் என பலரும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர். மாணவர்களின் திறமைகளை வெளிக் கொணர சிறந்த நிகழ்ச்சிகளும் மேடையேற்றப்பட்டன.

# முட்டை கட்டுப்பாட்டு விலைகளில் அடுத்த இருவாரங்களுக்குள் மாற்றம்!

முட்டைக்கான கட்டுப்பாட்டு விலை அடுத்த இரண்டு வாரங்களில் திருத்தம் செய்யப்படும் என வர்த்தகம், வணிகம் மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

பல்பொருள் அங்காடிகளில் விற்கப்படும் பொதி செய்யப்பட்ட முட்டைகளுக்கான புதிய கட்டுப்பாட்டு விலையை நிர்ணயிக்க அமைச்சு தீர்மானித்துள்ளது.

அதன்படி, தொகுக்கப்பட்ட வெள்ளை மற்றும் சிவப்பு நிற முட்டைகளுக்கு தனித்தனியாக கட்டுப்பாட்டு விலை நிர்ணயிக்கப்பட உள்ளது.

பொதியிடல் தொடர்பான தீர்மானங்கள் தொடர்பாக நுகர்வோர் விவகார அதிகாரசபையின் ஊடாகத் தேவையான பரிசீலனைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என அமைச்சு கூறியுள்ளது.

வெள்ளை முட்டை ஒன்றின் கட்டுப்பாட்டு விலை 43 ரூபாவாகவும் பழுப்பு நிற முட்டை ஒன்றின் கட்டுப்பாட்டு விலை 45 ரூபாவாகவும் நிர்ணயித்து அண்மையில் வர்த்தமானி அறிவிப்பு வெளியானது.

இதற்கு முட்டை உற்பத்தியாளர்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்தமையால், தற்போது சந்தையில் முட்டை தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், வெள்ளை மற்றும் சிவப்பு அல்லது பழுப்பு நிற முட்டைகளின் விலையை தனித்தனியாக 50 ரூபாவாக அதிகரிக்க வர்த்தக அமைச்சர் இணங்கியுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.



# போதைப் பொருள் வர்த்தகர் கோண்டாவிலில் வைத்து கைது!

யாழ்ப்பாணத்தில் ஹெரோயின் போதைப் பொருள் விற்பனையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் நீண்டகாலமாக தேடப்பட்டு வந்த பிரதான சந்தேக நபர்களில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கோண்டாவில் ரயில் நிலையப் பகுதியில் இந்த நபர் நடமாடுவதாக பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் அந்த இடத்திற்கு விரைந்த பொலிஸார் 27 வயதுடைய சந்தேக நபரைக் கைது செய்துள்ளனர்.

சந்தேக நபரிடமிருந்து 5 கிராம் ஹெரோயின் போதைப்பொருள் மற்றும் போதைப்பொருள் வியாபாரத்தில் பெற்றுக்கொண்ட 75 ஆயிரம் ரூபா பணம் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

இதுதொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஊடகவியலாளர் பிரகாஸின் நினைவாக இரத்ததானம்!











கடந்த வருடம் கொரோனா தொற்றுக்குள்ளான நிலையில் உயிரிழந்த இளம் ஊடகவியலாளர் ஞானப்பிரகாசம் பிரகாஷின் முதலாம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு நேற்று (ஞாயிற்றுக்கிழமை) யாழ்ப்பாணத்தில் இரத்ததான நிகழ்வு இடம்பெற்றது.

பிரகாஷினுடைய நண்பர்களின் ஏற்பாட்டில் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் இந்த இரத்ததான நிகழ்வு இடம்பெற்றது.

கொடிகாமத்தைச் சேர்ந்த பிரகாஸ் தனது ஏழாவது வயதில் தசைத்திறன் குறைபாடு நோயால் பாதிக்கப்பட்டதால் நடக்க முடியாத நிலை ஏற்பட்டது.

அதனால் தரம் ஐந்துடன் தனது பாடசாலைக் கல்வியை இடைநிறுத்திக்கொண்டார். அந்நிலையிலும் அவற்றை எல்லாம் தாண்டி அவர் ஊடகத் துறையில் தனக்கென ஓர் இடத்தைத் தக்க வைத்திருந்தார்.

சுயாதீன ஊடகவியலாளராக யாழில் இருந்து வெளிவரும் பத்திரிகைகளுக்கு கட்டுரைகள், செய்திகள் எழுதி வந்ததுடன், உள்நாட்டு, வெளிநாட்டு இணையத் தளங்களுக்கும் செய்திகளையும் கட்டுரைகளையும் எழுதி வந்தார். அதேவேளை சில இணையத்தளங்களில் செய்தி பதிவேற்றுநராகவும் கடமையாற்றி வந்தார்.

அந்நிலையில் கடந்த 2021 செப்ரெம்பர் மாதம் 2 ஆம் திகதி கொரோனா தொற்றினால் பாதிக்கப்பட்டிருந்த நிலையில் உயிரிழந்தார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம், இல-551A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 29.08.2022இல் வெளியிடப்பெற்றது.